**23.01.2025**
**CC.No.212/2015**

**வா.சா.ஆ.3**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணையின் தொடர்ச்சி**

திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம் சங்கங்களின் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். மேற்படி சங்கம் 1969—ல் சங்கம் பதிவு எண்.80 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒவ்வொரு வருடமும் சங்கப் பதிவு சட்டம் 1975 பிரிவு 26ன் படி ஆண்டு பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட வேண்டும். மேற்கண்ட பொதுக்குழு கூட்டத்தில் படிவம் 7 (நீக்கல் மற்றும் சேர்த்தல் மற்றும் தேர்தல்) ஆகியவை தீர்மானமாக நிறைவேற்றப்படும். அதன் பின்னர் மேற்கண்ட பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது மாவட்ட பதிவாளர் அலுவலத்தில் தாக்கல் செய்யப்பட்டு உரிய கட்டணம் செலுத்தப்பட்டு மாவட்ட பதிவாளரால் கோர்வைக்கு ஏற்கப்படும். 29.11.1987—ல் நடைபெற்றதால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் (எ.சா.ஆ.2 ஆவணம்) மாவட்ட பதிவாளர் கோப்பில் இல்லை. 10.12.1987ல் நடைபெற்றதாக தெரிவிக்கப்படும் தீர்மானம் (எ.சா.ஆ.3 ஆவணம்) மாவட்ட பதிவாளர் கோப்பில் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எ.சா.ஆ3 ஆவணம் தொடர்பாக நான் நீதிமன்றத்தில் எடுத்து வந்துள்ள கோப்புகளில் ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. சங்க பதிவேட்டை ஆய்வு செய்யப்பட்டதில் 1987—ம் வருடம் கடைசியாக தாக்கல் செய்யப்பட்டு கோர்வைக்கு ஏற்கப்பட்ட தீர்மானம் 20/1987 என உள்ளது. மேற்கண்ட 20/1987 தீர்மானத்தை பார்க்கப்பட்டதில் பொதுக்குழு நடைபெற்ற நாள் 20.10.1987 என உள்ளது. எனவே 1987ம் வருடத்தில் நடைபெற்ற கடைசி தீர்மான நாள்.20.10.1987 ஆகும்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-10.pdf

ஆவணங்கள் எடுத்து வரவேண்டும் என்று சாட்சி அவகாசம் கோரியதின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

***Sd/ M. Balaji B.A.,B.L.,***
Judicial Magistrate No.I,
Tiruchirappalli.

JM I TRICHY

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-10.pdf